மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

ஸ்ரீரங்கம்

**OS-46/2020**

**02.07.2026**

**PW-1 பெயர்.திரு. செல்வம் த/பெ.திருமொழியான் (வயது-72 /2026)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

ஏற்கனவே குறுக்குவிசாரணை செய்த கேள்விகள் ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. 12 அடி பாதைக்கு வடக்கில் நான் கிரையம் பெற்ற சொத்திற்கு மேற்கிலும் 1ம் பிரதிவாதி ஆதிகேசவலு இருந்தார் என்றால் சரிதான் . ஆதிகேசவலு பின்னிட்டு 3ம் பிரதிவாதியிடம் கிரையம் செய்துவிட்டார் என்றால் சரிதான் . 14.02.1991 கிரையப்பத்திரப்படி கிரையம் பெற்ற 480 சதுரடி மட்டும்தான் நான் தாவாவை சுற்றியுள்ள பகுதிகளில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான் . அவ்வாறு கிரையம் பெற்ற சொத்து ஆதிகேசவலு வீட்டிற்கு கிழக்கு என்றால் சரிதான் . எனது வீட்டிற்கு செல்வதற்கு மேற்சொன்ன கிழமேல் 12 அடி பாதை வழியாகதான் செல்லவேண்டும் என்றால் 12 அடி பாதை இல்லை. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வடக்கில் உள்ள எனது வீட்டிற்கு எவ்வாறு செல்கிறேன் என்றால் ஆதிகேசவலு இடத்தின் வழியாக உள்ளே செல்கிறேன். ஆதிகேசவலு இடத்தின் வழியாக செல்லும் பாதை 12 அடி பாதை இருக்குமா என்றால் 8, 9 அடி பாதைதான் இருக்கும். தற்சமயம் எனது வீட்டை வாடகைக்கு விட்டிருந்தேனா என்றால் வாடகைக்கு விட்டுள்ளேன் . எத்தனை ஆண்டுகளாக வாடகைக்கு விட்டுள்ளேன் ்என்றால் 10 வருடங்களான வாடகைக்கு விட்டுள்ளேன் . அந்த வீட்டு வாடகையை தவிர வேறு எத்தனை வீட்டிற்கு வாடகை வாங்கி வருகிறேன் என்றால் அந்தவீடை தவிர நான்கு போர்சன்களுக்கு வாடகை விட்டு வருகிறேன் . நான்கு பேர்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளேன். சின்ன, சின்னதாக மேற்சொன்னவாறு நான்கு பேர்களுக்கு வாடகைக்க விட்டுள்ள இடம் மேற்சொன்ன 12 அடி பாதையில் கட்டப்பட்டுள்ளது என்றால் 12 அடிபாதை கிடையாது. அது ஆதிகேசவலு இடமாக இருக்கலாம். அந்த 12 அடிபாதை வடக்கில் உள்ள உரிமையாளர் ஆதிகேசவலு தெற்கில் உரிமையாளரான வாதிக்கும் பயன்பாட்டிற்காக விடப்பட்ட இடம் என்றால் சரியல்ல . அந்த மேற்சொன்ன 12 அடி பாதையில் வாதி மற்றும் ஆதிகேசவலு அனுமதியின்பேரில் நான் எங்கள் வீட்டிற்கு சென்று வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும்

மேற்சொன்ன 12 அடி பாதையில் எந்தவித வாசற்கதவும் இல்லாமல் இருந்தது என்றால் அது 12 அடி பாதை இல்லை. அப்போது கேட் எந்த இடத்திலும் இல்லை அனைத்து இடங்களும் காலியாகதான் இருந்தது . தற்போது அந்த பாதையில் கேட்இருக்கிறது என்றால் தற்சமயம் கேட் இருக்கிறது . அந்த கேட் யார் வைத்தது என்றால் அவருடைய இடத்தில் நான்தான் வைத்தேன். வாதி மற்றும் தற்சமயம் 3ம் பிரதிவாதிக்கு சொந்த உபயோகத்திற்காக விடப்பட்ட இடத்தை அடைக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அவ்வாறு அனுமதியின்றி கேட் வைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே என்மீது ஆதிகேசவலு வழக்கு தாக்கல் செய்துள்ளார் அசல் வழக்கு எண் .448/1994 என்றால் சரிதான் . அந்த அசல் வழக்கு எண்.448/1994 வழக்கு ஆவணங்களை இந்தவழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை . அந்த வழக்கு என்மீது எதற்காக ஆதிகேசவலு போட்டார் என்றால் நான் ஆக்கிரமித்துள்ளேன் என்று வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்தவழக்கிலும் (பி.வா.சா.ஆ.2) தாவா B அட்டவணை சொத்தான கிழமேல் 52 , தென்வடல் 12 நான் ஆக்கிரமித்துள்ளேன் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் அதற்கு பிறகு தவறு என்று உணர்ந்து வழக்கை சமரசம் செய்துக்கொண்டார் . எனக்கும் ஆதிகேவலுக்கும் எவ்வாறு சமாதானம் ஆனது என்றால் அந்தவழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 12 அடி பாதை என்னிடம் இல்லை என்றும் அது டாக்டரிடம்தான் உள்ளது என்றும் வழக்கை சமாதானம் செய்துக்கொண்டார் . நான் சொல்வதுபோல் சமாதானம் ஆகவில்லை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . பி.வா.சா.ஆ.4 சமாதானம் தீர்ப்பாணையின்படி தாவா சொத்துக்களில் உள்ள கட்டுமானங்களைபிரதிவாதி அப்புறப்படுத்தவேண்டும் என பத்தி –3லும், மராமத்து செய்வதற்காக பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்து அதன்படி வாதி மராமத்து செய்துக்கொள்ளவேண்டும் எனவும் மற்ற பரிகாரங்களை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அவ்வாறுதான் சமாதானம் ஆனோம் . மேற்சொன்ன அசல்வழக்கு எண் . 448/1994 வழக்கில் தென்வடல் 12 மற்றும் கிழமேல் 52 காலியிடம் ஆதிகேசவலு , செல்வம் , மற்றும் இந்த வழக்கு வாதி ஆகியோர் பயன்பாட்டிற்காக விடப்பட்ட காலியிடம் என்று வழக்கு பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணப்படி மேற்சொன்ன காலியிடம் இந்த வழக்கு வாதி, 2–ம் பிரதிவாதி மற்றும் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற 3ம் பிரதிவாதி

ஆகியோர் பொதுவாக பயன்படுத்த பாத்தியப்பட்டுள்ள இடம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் அசல் வழக்கு 448/1994 பிராதில் பத்தி-4 ல் மேற்சொன்ன 12 க்கு 52 பாதை அந்த வழக்கின் வாதி , பிரதிவாதி மற்றும் தெற்கே உள்ள சொத்தின் உரிமையாளர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்று கண்டுள்ளது தற்போது வழக்கிற்காக தாங்கள் பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் அளந்தாரா என்றால் வந்தார் அளந்தார். ( **நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ .ம.சா.ஆ.1 ஆகவும், வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது).** நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை பார்த்துள்ளீனாள என்றால் பார்த்துள்ளேன். அந்த அறிக்கையில் தாவா D அட்டவணை சொத்து கட்டிடங்களால் ஆக்கிரமித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் D அட்டவணை என்ற இடமே இல்லை. டாக்டர் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
*Srirangam.*